## வைகோவின் ‘புதிய தம்பி’ – விஜய்யை புகழ்வதில்

# வைகோவிற்கும் - ஆதவ் அர்ஜுனாவுக்கும் இடையேதான் போட்டி!

## “ஆதன் நியூஸ்” இணையதள தொலைக்காட்சிக்கு மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் பேட்டி!

**கரூர், ஜூலை 11 –**

**வைகோவின் அரசியல் – நடிகர் லிவிங்ஸ்டன் சினிமாவில் கூறிய “ரொம்ப கூவுறான்” காட்சியையும் – கரகாட்டக்காரன் “கார் காட்சியுமே” நினைவுபடுத்துகிறது என்றும் விஜய்யை புகழ்வதில் வைகோவிற்கும் – ஆதவ் அர்ஜுனாவுக்கும் இடையேதான் போட்டி என்றும் “ஆதன் நியூஸ்” இணையதள தொலைக்காட்சிக்கு மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் பேட்டியளித்துள்ளார்.**

**‘ஆதன் நியூஸ்’ இணைய தள தொலைக்காட்சியில் நெறியாளர் மாதேஷ் நடத்திய நேர்காணலில் மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் கலந்து கொண்டு அளித்த பேட்டி வருமாறு:–**

**நெறியாளர்:** த.வெ.க.வுடன் ஆதரவு கட்சிகளாக இருக்கக் கூடிய வி.சி.க.மற்றும் ம.தி.மு.க. குறிப்பாக வைகோ, திருமாவளவன் இரண்டு பேர் பற்றி தான் பேசியாக வேண்டும். திருமாவளவன் நிலைப்பாடு காலை ஒரு கருத்து, மாலை ஒரு கருத்து என்று மாறி மாறி சொல்கிறார். தி.மு.க.வுடன் நட்பாக இருக்கிறேன் என்று சொல்கிறார். த.வெ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்கிறார். த.வெ.க.வை வைகோ ரொம்ப தீவிரமாக ஆதரிக்கிறார். இரண்டு பேரின் நிலைப்பாட்டை எப்படி பார்க்கிறீங்க?

### வைகோவுக்கும், செய்தியாளர்களுக்கும் மோதல்!

**துக்ளக் ரமேஷ்:** வைகோ அவர்கள் மீது எனக்கு பெரிய மரியாதை உண்டு. சிறந்த நாடாளுமன்றவாதி, அதில் எல்லாம் சந்தேகமில்லை. ஆனால் சமீபகாலமாக அவரது அரசியல் என்பது தடுமாற்றம் நிறைந்ததாக அல்லது ஏமாற்றத்தை அளிப்பதாக காட்சி அளக்கிறது.

குறிப்பாக அண்மையில் அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த ஒரு கருத்து, அந்தச் செய்தியாளர் சந்திப்பில் தான், அவருக்கும் செய்தியாளர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதற்கு செய்தியாளர் அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

அந்தச் செய்தியாளர் சந்திப்பில் அவர் சொல்கிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாதிரி ஒரு ஊழல் ஆட்சியை நான்பார்த்ததில்லை. கரப்ஷன், கலெக்சன், கமிஷன் இது தானே திராவிட முன்னேற்றக் கழகம். இப்போது வந்திருக்கக் கூடிய ஆட்சி ஊழலற்ற ஆட்சி, மாசு மறுவற்ற ஆட்சி என்று அவர் பாராட்டுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

ஏனென்றால் ஒரு ஊடகவியாளர் என்ற வகையில், நான் இதுவரை பெரிய குற்றச்சாட்டு எதையும் கேள்விப்படவில்லை. ஆனால் ஓரிரு புகார் இன்றைக்கு பொது வெளியில் தலை தூக்க ஆரம்பித்து இருக்கின்றன.

அரசு வழக்கறிஞர்கள் நியமனம், அந்த நியமனத்திற்கான இன்றைய த.வெ.க. அமைச்சருடைய சிபாரிசு கடிதம், காங்கிரஸ் கட்சியின் தலைவர், அமைச்சர் இவர்களுடைய சிபாரிசு கடிதங்கள் இவையெல்லாம் பத்திரிகைகளில் பிரசுரமாகி இருக்கின்றன. என் நண்பர் நிர்மல் குமார் அவர்கள் இதற்காக யாரும் லஞ்சம் கொடுத்து ஏமாற வேண்டாம், சிபாரிசு எல்லாம் எடுபடாது, தகுதியானவர்கள் தான் நியமிக்கப்படுவார்கள் என்று ஒரு புறம் பேட்டி அளித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மறு புறம் அரசு வழக்கறிஞர்கள் பணி இடங்களில் அரசியல் தலையீடு இருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

எனக்குத் தெரிந்து நீதித்துறையில் கூட இந்தப் பிரச்சினை இன்றைய தினம் கவனத்திற்கு கொண்டு செல்லப் பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் ஒரு முறையீடு தாக்கலாகி இருக்கிறது. இந்த முறையீடு குறித்து கேள்வி எழுப்பி ஒரு முறையீடு தாக்கலாகி இருக்கிறது. அது குறித்த விவரங்கள் விசாரணைக்குப் பிறகு தெரிய வரும்.

வைகோ அவர்களைப் பொறுத்த வரை, அவரிடம் நிருபர்களே கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஊழல் ஆட்சி என்று சொன்னீர்களே, கரப்ஷன், கலெக்சன் தான் அதிகமாக இருந்தது என்று சொல்கிறீர்களே. ஐந்தாண்டு காலம் அந்த திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியிலே இருந்தீர்களே, இது குறித்து, ஒரு முறையாது, எப்போதாவது திருவாய் மலர்ந்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள்.

### வைகோ அரசியலில் தடுமாற்றம்!

**நெறியாளர்:** கூட்டணி தர்மத்திற்காகத்தான் அதுபற்றி பேசவில்லை என்று சொல்கிறார்.

**துக்ளக் ரமேஷ்:** கூட்டணி தர்மத்திற்காக பேசாமல் இருந்தேன் என்று அவர் சொல்வது நகைப்புக்குரியது. ஊழல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால் அந்த ஊழல் குறித்து பேச வேண்டும். அந்த ஆட்சி தன்னுடைய தவறுகளை திருத்திக் கொள்ள மறுக்குமானால் கூட்டணியில் இருந்து அப்போதே வெளியேறி வைகோ வந்திருக்க வேண்டும். அப்போது தான் அறம் சார்ந்த அரசியலாக இருக்கும்.

வைகோ அவர்கள் அரசியலில் தடுமாற்றத்திற்கு ஆட்பட்டு இருக்கிறார் என்று நான் பார்க்கிறேன். இன்னும் சொல்லப்போனால் விஜய் அவர்களை புகழ்வதை போகிற போக்கில் த.வெ.க. காரர்களை அவர் மிஞ்சிவிடுவார் போல் இருக்கிறது. வைகோ அவர்கள் ஒரு உணர்ச்சி வசப்பட்ட மனிதர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அழுவதாக இருந்தாலும் நம்மை அழவைப்பதில் நான்கைந்து கைகுட்டைகள் பிழிந்து வைத்து அழுவார். சிரிக்க வைப்பதாக இருந்தாலும் சரி, ஆவேசப் பேச்சாக இருந்தாலும் சரி எல்லாவற்றிலும் ஒரு Extreme-க்குப் போய் விடுவார்.

உங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். அப்போது அந்தக் காலக்கட்டத்தில் அது விமர்சனம் ஆனது. மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட சென்னையில் கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டம். பக்கத்தில் வைகோ அமர்ந்திருந்தார். மு.க.ஸ்டாலின் அவர்கள் தேநீர் அருந்திக் கொண்டே வைகோவிடம் பேசுகிறார். ஒரு துளி சிந்திவிட்டது. வைகோ பதறிப்போய் எழுந்து போய் கைக்குட்டையை எடுத்துக் கொண்டு போய் துடைத்து இருப்பார். இப்படியெல்லாம் செய்தவர் தான் வைகோ.

அதேபோல மு.க.ஸ்டாலின் அவர்களைப் பற்றி அவர் பேசிய வீடியோ இன்றைக்கும் இருக்கிறது. உங்களுக்குத் தெரியாமல் இருக்காது. ஏனென்றால் மாதேஷ் அவர்கள் எதையும் நினைவில் தேக்கி பிறகு ஞாபகப்




படுத்தி கேள்விகள் கேட்கக் கூடிய சாமர்த்தியம் படைத்தவர். ஆகவே உங்களுக்கு அது நிச்சயம் தெரிந்து இருக்கும்.

### கொடுத்த காசுக்கு மேலே கூவுறாண்டா – லிவிங்ஸ்டன் சினிமா காட்சி!

அவர் என்ன சொன்னார்? இந்திய உபகண்ட அரசியலில் இன்றைக்கு ஒரு முக்கியமான பங்கு வகிப்பவர் தளபதி மு.க.ஸ்டாலின். இந்தியக் கூட்டணியின் முதுகெலும்பு மு.க.ஸ்டாலின் என்று தோளிலே இருக்கக் கூடிய துண்டை அப்படி போட்டு சிலிப்பிக் கொண்டு வைகோ அவர்கள் பேசிய காட்சியை நாம் மறந்து விட முடியாது.

அப்போது தி.மு.க.வில் இருக்கக் கூடிய டி.ஆர்.பாலு, அதேபோல, ஆ.இராசா, பொன்முடி இவர்கள் எல்லாம் திகைத்துப் போனார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத குறைதான்.

நடிகர் லிவிங்ஸ்டன் ஒரு படத்திலே சொல்வார், டேய் இவன் ரொம்ப கூவுறாண்டா, என்பார். அடுத்த ஜனாதிபதி அப்படி என்று ஒருத்தன் சொல்வான். ஒருத்தன் வருங்கால முதலமைச்சர் என்று சொல்லும் போது ஒருவன் கூட்டத்தில் அடுத்த ஜனாதிபதி என்று சொன்னவுடன் , லிவிங்ஸ்டன் சொல்வார் இவன் ரொம்ப கூவுறாண்டா அப்படி என்று சொல்லி, அவனை ஸ்பெஷலாக கவனிப்பார் லிவிங்ஸ்டன் அந்த மாதிரி வைகோ, இந்திய உபகண்டத்தில் எதிர்கால அரசியலை தீர்மானிக்கப் போகிறவர் தளபதி மு.க.ஸ்டாலின் என்று சொன்னவர், இன்றைக்கு அதே அளவிற்கு விஜய்யை சொல்கிறார்.

**நெறியாளர்:** பாதுகாப்பு அரணாக – இராணுவ வீரர் போல நிற்பேன் என்கிறாரே வைகோ?

**துக்ளக் ரமேஷ்:** இதே மாதிரி தான் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சொன்னார். என்ன சொன்னார்? கலைஞர் அவர்களிடம் நான் சத்தியம் செய்து விட்டு வந்திருக்கிறேன். என் கண்ணின் இமை போல் காப்பேன் தளபதி மு.க.ஸ்டாலினை என்று சொன்னாரா இல்லையா.?

### வைகோவின் புதிய தம்பி விஜய்!

**நெறியாளர்:-** சொன்னார் சார்!

**துக்ளக் ரமேஷ்:** கலைஞர் மறைந்த உடனே சரி சார், அவர் அப்பாவுக்கு கொடுத்த வாக்குறுதி முடிந்துபோய் விட்டது என்று கிளம்பி வந்துவிட்டாரா? தம்பி கூடவே இருந்து ஒரு ராஜ்ய சபா சீட் வாங்கிவிட்டார். தம்பி கிட்டேயே கூட இருந்து மகனுக்கு லோக்சபா சீட் வாங்கிவிட்டார். தம்பி எலக்ஷனில் தோத்த உடனே, தம்பிக்கு விடை கொடுத்து விட்டு, புதிய தம்பியை தேடி வந்துவிட்டார்.

வைகோவின் புதிய தம்பி விஜய். இப்போது மு.க.ஸ்டாலின் தளபதி என்பது பொய் ஆகி விட்டது. தளபதி விஜய்க்கு, வைகோ தளபதி ஆகி விட்டார் புஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனாவுக்கு நிகராக அல்லது அவர்களுக்கு இடத்திற்கு போட்டி போடுபவராக வைகோ மாறி போனது,வைகோ என்கிற ஒரு பெரிய மனிதருக்கு நேர்ந்து விட்ட அவலம் என்று நான் இதை பார்க்கிறேன்.

**நெறியாளர்:-** இந்த வேகத்தையும் இந்த உணர்வுகளையும் தன்னுடைய இரண்டு எம்.எல்.ஏ.க்களையும் தக்கவைப்பதில் அவர் காட்டியிருக்கலாம் இல்லையா?

**துக்ளக் ரமேஷ்:** அதுதானே நான் கேட்கிறேன், அவருடைய ஆற்றாமை, ஆதங்கமே அதுதான். இப்போது சமூக வலைதளங்களில் வருகின்ற செய்திகள் தான் உண்மையா என்று தெரியவில்லை. வருகின்ற இடைத்தேர்தலில் புதிய தளபதி ஒரு சீட்டை அவருக்கு கொடுத்து விட்டால், வைகோவே நின்று மந்திரியாக ஆகி விடலாம் என்று நினைக்கிறாரா? இல்லை, இவருக்கு அடுத்து இரண்டு ராஜ்யசபா சீட் வரும். நிச்சயமாக நம்முடைய த.வெ.க.வுக்கு மூன்று வரும் அப்போது ஒன்றை பார்த்து போட்டுக் கொடுங்க என்று இப்போதே ஒரு துண்டை போடுகிறாரா வைகோ என்பது நமக்குத் தெரியவில்லை.

### “கூவுவதில்” வைகோவுக்கும் ஆதவ் அர்ஜுனாவுக்கும் போட்டி!

**நெறியாளர்:** திருமா ஒரு கருத்தை விமர்சிக்கிறார். இவர்கள் எல்லாம் ஒரு கூட்டணியில் இருந்தவர்கள்.

**துக்ளக் ரமேஷ்:** அதைத்தான் நான் சொல்கிறேன். இவர்கள் “கூவுவதில்” போட்டி, இப்போது வைகோவுடன் யார் போட்டி போடுவது என்றால் நம்முடைய ஆதவ் அர்ஜுனா கூட கிடையாது, அடுத்த கட்சி யாரு, பக்கமேளம் வாசிக்கின்ற காங்கிரஸ். பீட்டர் இப்போது நாதஸ்வரத்தை எடுத்து விட்டார் விஜய்க்கு வாசிப்பதற்காக. காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் என்ன நினைக்கிறார். விஜய்க்கு வாசிப்பதற்கு வந்து என் பக்கத்தில் பேட்டி கொடுக்க உட்காருகிறீர்களா? நீங்கள் என்ன வாசிப்பது; நானே வாசிக்கிறேன். தமிழக வெற்றிக் கழக அரசை எந்தக் குறையும் கூற முடியாது. இந்த ஆட்சி சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. த.வெ.க. காரர்கள் பார்க்கிறாங்க நமக்கு வேலையே வைக்க மாட்டேன் கிறார்களே, இவர்களுக்கு போக மீதி என்ன இருக்கு. யோசித்துதான் பாராட்ட வேண்டும் போல இருக்கே.

**நெறியாளர்:** தங்களுடைய இடத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். தங்களுடைய எதிர்காலத் திட்டத்தையும்...?

**துக்ளக் ரமேஷ்:** ஆமாம், அவர் அவர்களுக்கு ஒரு கணக்கு இருக்கிறது. அடுத்து உள்ளாட்சித் தேர்தல் காங்கிரஸ், தி.மு.க. விடம் எல்லாம் கேட்டுப் பார்த்துவிட்டார்கள். 30 சதவிகிதம் வேண்டும் என்று இப்போது விஜய்யிடம் 25 சதவிகிதம், 30 சதவிகிதம் என்று ஆரம்பித்து இருக்கிறார்கள். விஜய் என்ன செய்யப்போகிறார் என்று தெரியவில்லை.

### ம.தி.மு.க. ஒரு சிறிய கட்சி! கரகாட்டக்காரன் காட்சியை நினைவுபடுத்தும்!

வைகோவிற்கு ராஜ்யசபா சீட் கனவு இருக்கலாம். அவர் பையனுக்கு இவர் டெல்லிவுடன் சேர்ந்து எதாவது நடந்து அங்கு வரமாட்டோமா என்று கூட இருக்கலாம். வைகோ கட்சியே சின்ன கட்சி, என்னுடைய மதிப்புக்குரிய மறைந்த நாவுக்கரசர் காளிமுத்து அவர்கள் சொன்ன உதாரணம் தான் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு சமயம் அவர் என்ன சொன்னார்? கம்யூனிஸ்டுகளுடன் ஒரு சின்ன பிரச்சினை சலசலப்பு தோன்றியது. அதில் கம்யூனிஸ்ட்டு கட்சி பிளவுபடும் வண்ணை அம்பிகாபதி என்று நினைக்கிறேன். அப்போது காளிமுத்து சொன்னார். கம்யூனிஸ்டு கட்சியிலே பிளவா, கொசுவுக்கே ஆபரேஷனா என்று காளிமுத்து சொன்னார்.

அதே மாதிரி ம.தி.மு.க.வே மிகச் சிறியது. அதில் ஏற்கனவே ஒரு குரூப் வெளியே போய் விட்டது. இப்போது சமீபத்தில் முக்கியமான புள்ளிகள் எல்லாம் மு.க.ஸ்டாலினை போய் சந்தித்து தி.மு.க.வில் இணைந்து விட்டார்கள். பொடா ஆழகுசுந்தரம், சிவந்தியப்பன், மாரியப்பன், ஆற்றல் மிக்க மறைந்த திராவிட முன்னேற்றக் கழக தூணாக விளங்கியவரின் மகன் வி.ஆர்.செங்குட்டுவன் இவர்கள் எல்லாம் போய் விட்டார்கள். இங்கே ஒன்றும் இல்லை. கொசுவுக்கே ஆபரேஷனா என்ற வகையில் கட்சியை வைத்துக் கொண்டு, இவர் செய்கிற அலம்பல் இருக்கிறதே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற திராவிட பேரியக்கத்தை என்பார்.

எங்கே இருக்கிறது பேரியக்கம்? கரகாட்டக்காரன் படத்தில் வண்டியைத் தள்ளிக்கொண்டு வருவார்கள். இம்பலா கார் நின்று போய் விடும். அந்தப் பக்கத்தில் இருந்து ஈயம் பித்தளைக்கு பேரீச்சம் பழம் என்று சொல்வான். ஏண்டா நாங்க வரும் போது இப்படி சொன்னே என்று எட்டி ஒரு உதை உதைப்பபான் அந்த சைக்கிளை. இந்தக் கதையில் வருவதைப் போன்று வைகோ கட்சியை வைத்துக் கொண்டு இருக்கிறார்.

### ஜால்ரா அடிக்கும் கட்சியாக வைகோ மாறிவிட்டார்!

**நெறியாளர்:-** இவர்கள் எல்லாம் முழுமையாகவே த.வெ.க.வுடன் பயணம் செய்வார்களா? இல்லை இடைத் தேர்தலுக்கு பிறகு எதாவது சேஞ்சஸ் இருக்குமா

**துக்ளக் ரமேஷ்:-** இல்லை. அவ்வப்போது இடது சாரிகள் இந்த அரசோடு மாறுபாடு விஷயங்களை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வி.சி.க.வும். சொல்கிறது. அவர்கள் இன்னும் அதை வலிமையாக சொல்ல வேண்டும். வைகோ ஜால்ரா அடிக்கக் கூடிய கட்சியாக மாறிவிட்டார். குதிரை பேரமெல்லாம் கிடையாது என்று சான்றிதழ் கொடுக்கிறார். ஊழல் வாதியை சேர்த்துக் கொள்வது எல்லாம் அந்தக் கட்சியின் உரிமை என்கிறார்.

ஆகவே வைகோ போன்றவர்கள் கொஞ்சமாவது முன்யோசனையோடு அல்லது ஆழமாக சிந்தித்து சில நியாமான விமர்சனங்களையாவது, வி.சி.க., இடதுசாரிகள் வெளிப்படுத்துவது தொடர வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதேபோல கார்த்திக் சிதம்பரம் போன்றவர்கள் சில நேரங்களில் நியாயமான கருத்துக்களை அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட இடித்துரைக்கும் கருத்துக்கள் இருந்தால் தான் ஒரு அரசு கொஞ்சமாவது சில தவறுகளை செய்வதற்கு யோசிக்கும். ‘இடிப்பாரே இல்லாத ஏமார மன்னன்’ என்ற குறளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆகவே இந்த அரசு சரியான திசையில் பயணிப்பதற்கு, தோழமைக் கட்சிகள் தோழமை உணர்வோடு சுட்டிக் காட்டிட வேண்டிய நேரத்தில், தோழமை உணர்வோடு அரசின் தவறுகள் வரம்பு கடந்து போகும்போது காட்டமாகவும் விமர்சிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தக் கட்சிகளுக்கு இருக்கிறது என்பது என் பார்வை.

**நெறியாளர்:-** போன ஆட்சியில் தான் கூட்டணி தர்மம் என்று வைகோ கேட்கவில்லை. இப்போதும் கேட்க மாட்டார் போல் இருக்கிறதே?

**துக்ளக் ரமேஷ்:-** நான் தான் சொல்லிவிட்டேனே சார், விஜய்யினுடைய நற்பணி இயக்கம் என்பது தமிழக வெற்றிக் கழகமாக மாற்றப்பட்டுவிட்டது. அது கட்சியாக மாறிவிட்டது. விஜய் நற்பணி இயக்கத்தினுடைய - பழைய இயக்கத்தினுடைய புதிய தலைமை நிர்வாகியாக வைகோ மாறக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் பேட்டியளித்தார்.

## வைகோவின் அரசியல் - நடிகர் லிவிங்ஸ்டன் சினிமாவில் கூறிய “ரொம்ப கூவுறான்” காட்சியையும் - கரகாட்டக்காரன் “கார் காட்சியையும்” நினைவுபடுத்துகிறது!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி பகுதி வாரியாக கழக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்வில் மாநில நிர்வாகிகள் வி.சி.சந்திரகுமார், வீரமணி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில் குமார், செல்லபொன்னி, ப.க.பழனிச்சாமி, பகுதிச் செயலாளர் வி.சி.நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி, 21 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வட்ட கழக செயலாளர் ரா.ஆதித்தன் தலைமையில், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சைமன்ராஜ், லதா கலைவாணன், தமிழ்செல்வன், கோபாலகிருஷ்ணன், ஜோண்ஸ், கழக நிர்வாகிகள் ராயப்பன், அசோக்குமார், மகளிர் அணி நிர்வாகிகள் சகி ஷீலா, விமலா உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.